செ.வெ.எண்: 36 நாள்: 27.05.2019

**தூத்துக்குடி மாவட்டத்தில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றுப்போக்கை தடுப்பதற்காக இரு வார கால தீவிர வயிற்றுப்போக்கு தடுப்பு முகாம் 28.05.2019 முதல் 08.06.2019 வரை நடைபெற உள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

தூத்துக்குடி மாவட்டத்தில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்றுப்போக்கை தடுப்பதற்காக இரு வார கால தீவிர வயிற்றுப்போக்கு தடுப்பு முகாம் 28.05.2019 முதல் 08.06.2019 வரை நடைபெற உள்ளது.

தமிழ்நாட்டில் தற்போதைய ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் 1000 பிறப்புகளுக்கு 19 என்பதை 2023 ஆண்டுக்குள் 1000 பிறப்புகளுக்கு 10 ஆக குறைக்க வேண்டும் என்பதே தமிழக அரசின் இலக்கு.

5 வயதிற்குட்ட குழந்தைகளின் இறப்புக்காக முக்கிய காரணங்களில் வயிற்றுபோக்கு ஒன்றாகும். 5 வயதிற்குட்ட குழந்தைகளின் இறப்பில் 10 சதவிகிதம் வயிற்றுபோக்கினால் ஏற்படுகின்றது. நிமோனியாவுக்கு அடுத்தப்படியாக இது ஓர முக்கிய பொதுசு காதார பிரச்சனை ஆகும்.இதன் நோக்கம் 5 வயதிற்குட்ட குழந்தைகளிடையே வயிற்றுபோக்கினால் ஏற்படும் மரணத்தை முற்றிலுமாக தவிர்த்தல் ஆகும்.

வயிற்றுபோக்கிற்கான முக்கிய காரணங்கள் :

சீம்பால் புகட்டப்படாத குழந்தைகள், சுகாதாரமற்ற குழந்தை வளர்ப்புமுறைகள், தாய்மார்கள் கை சுத்தம் பேணாமல் இருத்தல், சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு இல்லாமை, பாதுகாப்பான குடிநீர் பற்றிய விழிப்புணர்வு இல்லாமை, குழந்தை பிறந்து ஆறு மாதங்கள் வரை தாய்ப்பால் மட்டுமே குழந்தைக்கு கொடுக்க வேண்டும் என்று விழிப்புணர்வு இல்லாமை ஊட்டசத்து குறைந்த குழந்தைகளும் இதில் அடங்கும்.

வயிற்றுபோக்கினை தடுப்பதற்கான வழிமுறைகள்

கழிப்பறைகளை பயன்படுத்துதல், பாதுகாப்பான குடிநீர் அருந்துதல் மாசுபடாத உணவு உண்ணுதல், கை சுத்தம் பேணுதல், தன்சுத்தம் மற்றும் சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் வயிற்றுபோக்கினை தடுக்கலாம்.

இரு வாரகால தீவிர வயிற்றுப்போக்கு தடுப்பு முகாம் 28.05.2019 முதல் தொடங்கி 08.06.2019 வரை நடைபெற உள்ளது இம்முகாமில் அங்கன்வாடி பணியாளாக்கள் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் ஓ.ஆர் எஸ் பொட்டலங்களை விநியோகிக்க வேண்டும். அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் கிராம சுகாதார செவிலியர்கள் வயிற்றுபோக்கு தடுப்பிற்கான முக்கிய தகவல்களை தாய்மார்கள் மற்றும் குடும்பத்தினருக்கு வழங்க வேண்டும். ஓ.ஆர் எஸ் கரைசல் தயாரிப்புக்கான செயல் விளக்கத்தினை அளித்திட வேண்டும். வயிற்றுப்போக்கினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஓ.ஆர் எஸ் கரைசல் மற்றும் ஜின்க் மாத்திரை கொடுத்திட வண்டும்.

ஜின்க் மாத்திரை வயிற்றுபோக்கை குறைக்கும் ஊட்டசத்தை மேம்படுத்தும், நோய் எதிர்ப்புதிறனை செழுமைப்படுத்தும், வயிற்றுபோக்கு மற்றும் நுரையீரல் அழற்சியை தடுக்கும்.

பள்ளிகளில் மாணவர்களுக்கு கைகழுவும் பழக்கம் மற்றும் கைகழுவும் முறையைபற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல் வேண்டும்.

தூத்துக்குடி மாவட்டத்தில் 5 வயதிற்குட்ட 138505 குழந்தைகள் இம்முகாமின் மூலம் பயன்பெறுவார்கள்.

இம்முகாமில் ஓ.ஆர் எஸ் கரைசல் மற்றும் ஜின்க் மாத்திரை பயன்படுத்தி வயிற்றுபோக்கை கட்டுபடுத்தி ஆரோக்கியமாக குழந்தைகள் வளர மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப்நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தி உள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.